A consumer is the important visitor on our premises.
He is not dependent on us.  We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806,  044-2953 5816    Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com                    Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 12 / 2022**

திரு. A. P. இராமகிருஷ்ணன்,
த/பெ. பச்சமுத்து, ஆசிரியர் நகர்,
கள்ளக்குறிச்சி வட்டம் & மாவட்டம் – 606 213.

………மேல்முறையீட்டாளர்
(திரு. A. P. இராமகிருஷ்ணன்)

எதிர்

செயற்பொறியாளர்/ கள்ளக்குறிச்சி,
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
செயற்பொறியாளர் அலுவலக வளாகம்,
ராஜம்மாள் நகர்,  அண்ணா நகர்,
கள்ளக்குறிச்சி – 606201.

…… எதிர்மனுதாரர்
(திரு. M. கணேசன், செயற்பொறியாளர்/ கள்ளக்குறிச்சி)

**மனு பெறப்பட்ட நாள்: 19-01-2022**

**கேட்புரை நாள்:  24-03-2022**

**ஆணை நாள்:  23-05-2022**

19.01.2022 அன்று பெறப்பட்ட திரு. A. P. இராமகிருஷ்ணன், த/பெ. பச்சமுத்து, ஆசிரியர் நகர், கள்ளக்குறிச்சி வட்டம் & மாவட்டம் – 606 213 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 12/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.  மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 24.03.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள்

ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>

தனக்கு வழங்கப்பட்ட தற்காலிக மின் இணைப்பை வீட்டு மின் இணைப்பாக மாற்றக் கோரி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>

2.1 வீடு கட்டுவதற்காக தற்காலிக மின் இணைப்பு பெற்று வீடு கட்டி முழுமை அடைந்த பின்பு வீட்டு மின் இணைப்பாக மாற்றக் கோரி உதவி பொறியாளர்/கள்ளக்குறிச்சி அவர்களிடம் மனு அளித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மேற்குறிப்பிட்ட மனுவை பெற்ற உதவி பொறியாளர்/கள்ளக்குறிச்சி கள ஆய்வு செய்த போது காம்பவுண்ட் சுவர் கட்டிமுடித்த பிறகுதான் வீட்டு மின் இணைப்பாக மாற்றித் தர இயலும் என தெரிவித்ததால் மேல்முறையீட்டாளர் கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 31.07.2021 அன்று அணுகியுள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம், 21.10.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 21.10.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>மன்றத்தின் தீர்ப்பு</u>:*

*மனுதாரர் திரு. A.P. ராமக்கிருஷ்ணன் த/பெ பச்சமுத்து, ஆசிரியர் நகர், கள்ளக்குறிச்சி அவர்கள் தனது மின்இணைப்பு எண் 549-007-973-ன் வீதப்பட்டி மாற்றம் தொடர்பாக மன்றத்திற்கு மனு செய்து மனு 003/03.08.2021*

*என பதிவு செய்யப்பட்டு மனுதாரருக்கு உரிய தகவல்கள் அனுப்பப்பட்டு உள்ளது.*

*இதனை தொடர்ந்து மன்றம் 21.10.2021–இல் கூடும் என அறிவிப்பு அளிக்கப்பட்டு, மனுதாரருக்கு அழைப்பாணை அளிக்கும்போது வருடத்தினை 2020 என தவறாக தட்டச்சு செய்யப்பட்டதற்கு மன்றம் வருத்தத்தை தெரிவித்துக்கொண்டது. மேலும் புகாருடைய அனைத்து கடித போக்குவரத்தும் 2021–இல் நடைபெற்று வருவதால், இதனை தவிர்த்து மனுவின் சாராம்சம் மட்டும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் மனுதாரரின் எழுத்து முறை கடிதத்தில் மன்றத்தின் மீது அவநம்பிக்கையும், செயல்பாடுகளை விமர்சித்து இருப்பதையும் ஏற்க முடியாத நிலையில், எதிர்மனுதாரர் மனுதாரரிடம் பெறப்பட வேண்டிய தொகை கணக்கீடு வாரிய விதிமுறைகளின்படி சரியானது என்பதை மன்றத்திற்கு தெளிவுபடுத்தி உள்ளது. எனவே மன்றம் இம்மனுவை தள்ளுபடி செய்கிறது. மேலும் மன்றத்தின் செயல்பாட்டின் மீது அவநம்பிக்கை கொண்டு வேறு மாவட்ட மன்றத்திற்கு மனுவை மாற்றம் செய்ய எவ்விதமான அறிவுரையும் வழிவகையும் C.G.R.F. மன்றத்தில் இல்லாததால் அவரது கோரிக்கை ஏற்க இயலாது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுவதுடன், மனு தள்ளுபடி செய்யப்படுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 24.03.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. A. P. இராமகிருஷ்ணன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு. M. கணேசன், செயற்பொறியாளர்/கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள்

முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட முகவரியில் வசித்து வருவதாகவும், வீடு கட்டுவதற்காக தற்காலிக (Tariff – VI) மின் இணைப்பு எண்.973 மூலம் பெற்று பயன்படுத்தி வந்ததாகவும், கடந்த 25.01.2021 அன்று வீடு கட்டி முழுமை அடைந்து, புதுமனை புகுவிழா முடிந்து மேற்படி வீட்டில் குடியிருந்து வருவதாகவும், வீடு கட்டும்போது தான் வாங்கிய தற்காலிக மின் இணைப்பை, வீட்டிற்குண்டான நிரந்தர மின் இணைப்பாக மாற்றித் தரக்கோரி, கள்ளக்குறிச்சி உதவி மின்பொறியாளரிடம் நடந்த 2021–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மனுகொடுத்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 எவ்விதமான நடவடிக்கையும் இல்லாததால் உதவி மின்பொறியாளரை சந்தித்து கேட்டபோது மனு தொலைந்துவிட்டதாகவும் அதனால் மீண்டும் ஒரு மனு கொடுக்க கூறியதின் பேரில் பின்னிட்டு ஒரு மனு கொடுத்ததின் அதனடிப்படையில் கடந்த 13.02.2021 அன்று மேற்படி அலுவலகத்திலிருந்து வந்த அதிகாரி ஆய்வு செய்துவிட்டுச் சென்றதாகவும், பின்னிட்டும் தனக்கு குடியிருப்பு மின்இணைப்பு மாற்றி வழங்கவில்லை எனவும், வீட்டு வேலை முடிந்து, குடியிருந்துவரும் நிலையில், ஏன் காலதாமதம் செய்கிறீர்கள் என கேட்டபோது தனது வீட்டை சுற்றி காம்பவுண்ட சுவர் எப்பொழுது கட்டுகிறீர்கள் என்று கேட்டதாகவும், தற்போது அதற்கான சூழ்நிலை இல்லை என்று மேல்முறையீட்டாளர் கூறியதாகவும், அதற்கு உதவி மின்பொறியாளர் அவர்கள், காம்பவுண்ட் சுவர் கட்டிமுடித்த பிறகுதான் தனக்கு வீட்டு மின் இணைப்பு வழங்க இயலும் என்று கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். காம்பவுண்ட் சுவர் கட்டிமுடித்த பிறகு உதவி மின்பொறியாளர் தன் வீட்டினை நேரில் ஆய்வுசெய்தபோது, கேட் வைத்த பிறகுதான் வீட்டு மின் இணைப்பு மாற்றித் தருவோம் என்று கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேற்படி உதவி மின்பொறியாளர் வேண்டுமென்றே திட்டமிட்டு, பழிவாங்கும் நோக்குடன் தனது வீட்டிற்குண்டான குடியிருப்பு மின் இணைப்பு மாற்றித்தராமல்

அலைக்கழித்துள்ளதாகவும், இதனால் தானும், தனது குடும்பத்தாரும் மன உளைச்சலுக்கும் மன வேதனைக்கும் ஆளாகியுள்ளதாகவும், தற்போது மேற்படி தனது வீட்டிற்குண்டான மின் கட்டணத்தை 04.08.2021 தேதிக்குள் ரூ.23,502/- கட்ட வேண்டுமென வாரியம் அறிவித்துள்ளதாகவும், மேற்படி தொகையானது மிகவும் அதிகமாக உள்ளதாகவும், தான் வீட்டு மின் இணைப்பாக மாற்றித்தர மனு அளித்தபோதே வீட்டிற்குண்டான மின் இணைப்பாக மாற்றம் செய்திருந்தால் தனக்கு இவ்வளவு தொகை வந்திருக்காது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம், தன்னுடைய மனுவின் மீது நடவடிக்கை எடுக்காமல், மனுதாரராகிய தன்னை விசாரிக்காமல், நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மனு எண்.003/2021-22, நாள்: 21.10.2021-இன்படி தனது மனுவை தள்ளுபடி செய்துவிட்டதாக தனக்கு கடிதம் வந்துள்ளதாகவும், மேலும் தனக்கு அநீதி இழைத்த திருமதி.சிந்து/உதவி மின்பொறியாளர் மீது துறை வாரியாக தக்க நடவடிக்கை எடுத்து தனக்கு இழப்பீடு ஏற்பட்ட தொகையை திரும்ப பெற்றுத்தர உத்திரவிடக் கோரியும் இனிவருங்காலங்களில் இதுபோன்று பொதுமக்களை அலைக்கழிக்காமல், உரிய காலத்தில் மின்இணைப்பு வழங்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் மேற்படி தான் செலுத்திய தொகை வாரியத்திற்கு வருமானம் என்பதால், அதிகாரிகள் ஒருதலைபட்சமாக தீர்ப்பு வழங்கியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம்/கள்ளக்குறிச்சி கோட்டம், உதவி மின் பொறியாளர்/கிராமம்/ஏமப்பேர் பிரிவுக்குட்பட்ட அம்மன் நகர் பகிர்மானத்தில் திரு. A.P. இராமகிருஷ்ணன், த/பெ. பச்சமுத்து என்பவருக்கு தற்காலிக மின்இணைப்பு எண்.549-007-973/ நாள் 24.02.2020 அன்று வீடுகட்டும் பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டதாகவும், மேலும் தற்காலிக மின்இணைப்பிலிருந்து வீட்டு மின்இணைப்பாக (TARIFF VI to 1A) வீதப்பட்டி மாற்றத்திற்கு விண்ணப்பம் மேற்கண்ட பிரிவு அலுவலகத்தில் பெற்று களஆய்வு செய்தபொழுது வீடு கட்டுமான பணி முழுமையாக முடியாமல் 39MX8M அளவில் காம்பவுண்ட சுவர் எழுப்புவதற்காக பில்லர் போட்டுக் கொண்டு இருந்ததால் வாரியத்திற்கு இழப்பு ஏற்படாமல் இருக்கவேண்டி,

காம்பவுண்ட் சுவர் எப்போது கட்டி முடிக்கப்படும் என கோரப்பட்டதாகவும், மனுதாரர் 15 நாட்களுக்குள் முடித்துவிடுவதாக வாய்மொழியாக தெரிவித்ததின் பேரில் காம்பவுண்ட சுவர் கட்டும் வேலையை முடித்துக் கொண்டு மீண்டும் விண்ணப்பம் அளிக்குமாறு தெரிவித்து அவரிடம் விண்ணப்பம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பிறகு தற்காலிக மின் இணைப்பிலிருந்து வீட்டு மின்இணைப்பாக (TARIFF VI to 1A) வீதப்பட்டி மாற்றம் செய்வதற்கு விண்ணப்பம் வரப்பெற்று 05.07.2021–இல் வீதப்பட்டி வீட்டு மின்இணைப்பாக மாற்றம் செய்து தரப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 காம்பவுண்ட் சுவர் கட்டிக் கொண்டு இருந்ததால் வாரியத்திற்கு இழப்பு ஏற்படாமல் இருக்க காம்பவுண்ட் சுவர் கட்டிமுடித்துவிட்டு வீதப்பட்டி மாற்றம் VI to 1A–ற்கு மாற்றம் செய்ய விண்ணப்பம் அளித்து மாற்றிக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதே தவிர மனுவில் கூறியுள்ளதைப் போல் கேட்டினை வையுங்கள் என்று கூறவில்லை என்று உதவிமின்பொறியாளர்/சிராமம்/ஏமப்பேர் அவர்கள் தெரிவித்துள்ளதாகவும், மேலும் மேற்படி மின்இணைப்பை வீதப்பட்டி மாற்றம் செய்வதற்கான களஆய்வில் (05.07.2021) மின்அளவிடு 2806–ம் 15.07.2021–ஆம் தேதி மின்கணக்கீட்டின்போது மின் அளவீடு 2990–ஆம் இருந்ததாகவும், அதில் 1786 யூனிட் தற்காலிக மின் இணைப்பிற்கும் 184 யூனிட் வீட்டு மின்இணைப்பிற்கும் பகிர்ந்து கணக்கீடு செய்யப்பட்டு தொகை ரூ.23,502/– வாரிய விதிமுறைப்படி சரியாக கணக்கிடப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில், தான் கள்ளக்குறிச்சி, ஆசிரியர் நகரில் வீடு கட்டுவதற்கான தற்காலிக மின்னிணைப்பு எண் 973 பெற்று பயன்படுத்தி வந்ததாகவும், கடந்த 25.01.2021 அன்று வீடு கட்டி முழுமையடைந்து மேற்படி வீட்டில் குடியிருந்து வருவதாகவும், அதனால் தற்காலிக மின்னிணைப்பை வீட்டிற்குண்டான நிரந்தர மின்னிணைப்பாக மாற்றித் தரக்கோரி கள்ளக்குறிச்சி உதவி மின்பொறியாளரிடம் ஜனவரி 2021–இல் மனு கொடுத்ததாக தெரிவித்துள்ளார். அதன்பின் எவ்வித நடவடிக்கையும் இல்லாததால் 13.02.2021 அன்று மற்றொரு மனு

அளித்ததின் பேரில் மேற்படி அலுவலக அதிகாரி ஆய்வு செய்து விட்டு சென்றதாகவும், ஆனால் வீதப்பட்டி மாற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் அலுவலகத்தை தொடர்பு கொண்டபொழுது தற்போது மின்னிணைப்பை வீதப்பட்டி மாற்றம் செய்ய இயலாது என உதவி பொறியாளர் தெரிவித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 அதன்பிறகு உதவி பொறியாளரை நேரில் சந்தித்து தன்னுடைய மின்னிணைப்பை வீட்டு மின்னிணைப்பாக மாற்றித்தர காலதாமதம் செய்வது குறித்து வினவியபோது, உதவி பொறியாளர் அவர்கள் வீட்டை சுற்றி காம்பவுண்ட் சுவர் கட்டிமுடித்த பிறகுதான் வீதப்பட்டி மாற்றம் செய்ய இயலும் என கூறியதாக தெரிவித்துள்ளார். அதன்பின் காம்பவுண்ட் சுவர் கட்டி முடித்த பிறகு ஆய்வு செய்த பொறியாளர் ஏன் வீட்டிற்கு கேட்டினை வைக்கவில்லை என்று கூறி, கேட் வைத்த பிறகுதான் வீட்டு மின்னிணைப்பு மாற்றித்தருவோம் என கூறியதாக தெரிவித்துள்ளார்.

7.4 மேலும், வீதப்பட்டி மாற்றம் செய்யாததால் 7/2021–இற்கான மின்கட்டணம் ரூ.23,502/– வந்துள்ளதாகவும், தான் வீட்டு மின்னிணைப்பாக மாற்றித்தர மனு அளித்தபோதே வீதப்பட்டி மாற்றம் செய்திருந்தால் தனக்கு இவ்வளவு தொகை வந்திருக்காது என்பதால் தக்க நடவடிக்கை எடுத்து இழப்பீடு ஏற்பட்ட தொகையை திரும்ப பெற்றுத்தர உத்திரவிடக்கோரி வாதிட்டுள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் மேல்முறையீட்டாளருக்கு தற்காலிக மின்னிணைப்பு எண் 549–007–973, நாள் 24.02.2020 அன்று வீடு கட்டும் பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டதாகவும், தற்காலிக மின்னிணைப்பிலிருந்து வீட்டு மின்னிணைப்பாக (Tariff VI to IA) வீதப்பட்டி மாற்றத்திற்கு விண்ணப்பம் பெற்று களஆய்வு செய்தபோது வீடு கட்டுமானப் பணி முழுமையடையாமல் 39m x 8m அளவில் காம்பவுண்ட் சுவர் எழுப்புவதற்காக பில்லர் போட்டுக் கொண்டு இருந்ததால் சுவர் கட்டும் பணி முடிந்தவுடன் மீண்டும் விண்ணப்பம் அளிக்குமாறு தெரிவித்து அவரிடம் விண்ணப்பம் ஒப்படைக்கப்பட்டதாகவும், அதன்பின் 29.06.2021–இல் வீதப்பட்டி விண்ணப்பம் வரப்பெற்று மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பை வீட்டு மின்னிணைப்பாக 05.07.2021 அன்று மாற்றம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

7.6 மேலும் காம்பவுண்ட் சுவர் கட்டிக் கொண்டு இருந்ததால் வாரியத்திற்கு இழப்பு ஏற்படாமல் இருக்க சுவர் கட்டிய பின் வீதப்பட்டி மாற்றம் செய்வதற்கு விண்ணப்பம் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டதாகவும், மனுவில் கூறியுள்ளது போல் கேட்டினை வையுங்கள் என உதவி பொறியாளர் கூறவில்லையென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேற்படி மின்னிணைப்பை வீதப்பட்டி மாற்றம் செய்வதற்கான களஆய்வில் (05.07.2021) மின் அளவீடு 2806 என இருந்ததாகவும், 15.07.2021– ஆம் தேதி மின்கணக்கீட்டின் போது மின்அளவீடு 2990 என இருந்ததால், அதில் 1786 யூனிட்கள் தற்காலிக மின்னிணைப்பிற்கும் 184 யூனிட்கள் வீட்டு மின்னிணைப்பிற்கும் பகிர்ந்து கணக்கீடு செய்யப்பட்டு ரூ.23,502/– கணக்கிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

7.7 மேற்கண்ட பத்திகளில் உள்ள வாதங்களின்படி இவ்வழக்கில் தீர்வு செய்யப்பட வேண்டிய எழுவினாவானது மேல்முறையீட்டாளரின் வீதப்பட்டி மாற்றத்திற்கான ஜனவரி 2021–இல் அளித்த மனுவிற்கு மேற்முறையீட்டாளரின் கட்டுமான பணி நிறைவடையாததால் அவ்வமயம் தற்காலிக மின்னிணைப்பிலிருந்து வீட்டு மின்னிணைப்பாக வீதப்பட்டி மாற்றம் செய்ய இயலவில்லை என்ற எதிர்மனுதாரரின் வாதம் சரிதானா? என்பதாகும். மேல்முறையீட்டாளர் வீடு கட்டுமான பணி முடிந்து 25.01.2021 முதல் மேற்படி வீட்டில் குடியிருந்து வருவதாக தெரிவித்துள்ளார். ஆனால் வீதப்பட்டி விண்ணப்பத்தின் பேரில் மேல்முறையீட்டாளரின் இல்லத்தை கள ஆய்வு செய்த பொழுது வீடு கட்டுமான பணி முழுமையாக முடியாமல் 39m x 8m அளவில் காம்பவுண்ட் சுவர் எழுப்புவதற்காக பில்லர் போட்டுக் கொண்டு இருந்ததால், காம்பவுண்ட சுவர் கட்டியவுடன் விண்ணப்பம் அளிக்குமாறு மேல்முறையீட்டாளரிடம் கோரப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இவ்வழக்கின் வாதம் தற்காலி மின்னிணைப்பு குறித்தது என்பதால் நான் தமிழ்நாடு மின்பகிர்மான விதி எண் 39–ஐ ஆராய விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட விதி எண் 39 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" 39.TEMPORARY SUPPLY:*

*Temporary supply of electricity to any premises shall be dealt with as below:-*

*(1) If the temporary supply as in the case of construction of building etc. is to be converted into permanent supply after completion of the construction, normal procedure to effect the supply to regular categories shall be followed and the consumer shall be charged under temporary supply tariff, i.e permanent supply procedure shall be adopted with temporary supply tariff. An undertaking shall be obtained from the consumer to the effect that the consumer will*

*accept to convert the temporary supply into appropriate permanent category **<u>after completion of the construction work</u>** in accordance with the regulations in force and to pay the charges if any arising out of such conversion. In such conversion, if conversion from lower voltage to higher voltage is involved, the existing lower voltage service connection shall be closed and new higher voltage service connection shall be provided in accordance with the regulations in force. ******* ”*

7.8 மேற்கண்ட மின்பகிர்மான விதி எண் 39–ஐ கூர்ந்து ஆராயும் போது கட்டுமான பணி முழுவடைந்த பிறகே ஒரு தற்காலிக மின்னிணைப்பை பயன்பாட்டிற்கு ஏற்ப வீதப்பட்டி மாற்றம் செய்யப்பட வேண்டும் என அறியப்படுகிறது. இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் பேரில் களஆய்வு செய்த போது கட்டுமான பணி முடிவடையாமல் 39m X 8m அளவில் காம்பவுண்ட் சுவர் எழுப்புவதற்காக பில்லர் போட்டுக் கொண்டிருந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். களஆய்வின் போது சுற்றுச் சுவருக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருந்ததால் கட்டுமான பணிகள் முழுவதும் முடிவடையவில்லையென்றே கருதவேண்டியுள்ளது. அதன்பிறகு 29.06.2021–இல் தற்காலிக மின்னிணைப்பில் இருந்து வீட்டு மின்னிணைப்பாக (Tariff change from TF VI to TF IA) வீதப்பட்டி மாற்றம் செய்வதற்கு மேல்முறையீட்டாளரிடமிருந்து விண்ணப்பம் வரப்பெற்று 5.7.2021 அன்று உரிமதாரரால் வீதப்பட்டி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 7/2021 மின்கணக்கீட்டு காலத்திற்கு கோரப்பட்ட ரூ.23,502/– தொகை விதிகளின்படியே கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, தாம் அதிகமாக செலுத்தியதாக கூறும் தொகையை திரும்ப வழங்கக்கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என தீர்வு செய்யப்படுகிறது.

## 8.0 <u>முடிவுரை</u>:

8.1 பத்தி 7–இல் உள்ள தீர்வுகளின்படி, மேல்முறையீட்டாளர் வீதப்பட்டி மாற்றம் குறித்த விண்ணப்பத்தின் பேரில் களஆய்வு செய்த போது கட்டுமான பணி முடிவடையாமல் 39m X 8m அளவில் காம்பவுண்ட் சுவர் எழுப்புவதற்காக பில்லர் போட்டுக் கொண்டிருந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். களஆய்வின் போது சுற்றுச் சுவருக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருந்ததால் கட்டுமான பணிகள் முழுவதும் முடிவடையவில்லையென்றே கருதவேண்டியுள்ளது. அதன்பிறகு 29.06.2021–இல் தற்காலிக மின்னிணைப்பில் இருந்து வீட்டு மின்னிணைப்பாக (Tariff change from TF VI to TF IA) வீதப்பட்டி மாற்றம் செய்வதற்கு

மேல்முறையீட்டாளரிடமிருந்து விண்ணப்பம் வரப்பெற்று 5.7.2021 அன்று உரிமதாரரால் வீதப்பட்டி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 7/2021 மின்கணக்கீட்டு காலத்திற்கு கோரப்பட்ட ரூ.23,502/- தொகை விதிகளின்படியே கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, தாம் அதிகமாக செலுத்தியதாக கூறும் தொகையை திரும்ப வழங்கக்கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என தீர்வு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 12/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திரு. A. P. இராமகிருஷ்ணன்,
த/பெ. பச்சமுத்து, ஆசிரியர் நகர்,
கள்ளக்குறிச்சி வட்டம் & மாவட்டம் – 606 213.

2. செயற்பொறியாளர்/ கள்ளக்குறிச்சி,
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
செயற்பொறியாளர் அலுவலக வளாகம்,
ராஜம்மாள் நகர், அண்ணா நகர்,
கள்ளக்குறிச்சி – 606201.

3. மேற்பார்வை பொறியாளர், – By email
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவாஜி நகர், லயன்ஸ் கிளப் பில்டிங்,
கள்ளக்குறிச்சி – 606 202.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.